**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M.,P.G.D in J.J & J.P

நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய் கிழமை

(2057 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம், மாசி மாதம் 26–ம் நாள்)

**CNR.No.TNED040076142025**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1119/2025**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
தாலுக்கா காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண்.226/2025 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

மதியானந்தன்,
த/பெ. சக்தி,
154/1, பெரங்கி மேடு,
கொங்கு இன்ஜினியரிங் காலேஜ் ரோடு,
பெருந்துறை,
ஈரோடு. ... குற்றஞ்சாட்டப்பட்டவர்

இவ்வழக்கானது கடந்த 06.10.2025–ம் தேதி, C.C.No.1119/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.N.அனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

**–தீர்ப்புரை–**

இந்த வழக்கு 193(2) BNSS இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

கடந்த 30.07.2025–ம் தேதி, மதியம் 15.00 மணியளவில், ஈரோடு – பூந்துறை ரோட்டில் மூலப்பாளையம் டெலிபோன் நகர் பஸ் ஸ்டாப் அருகில் சாட்சி–1 மாணிக்கம் என்பவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டை கடந்து சென்ற போது அதே

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:01:07 +0530

ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN 56 T 9724 என்ற பதிவெண் உள்ள பஜாஜ் பல்சர் பைக்கினை எதிரியாகிய நீர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாட்சி–1 மாணிக்கம் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும், அதில் சாட்சி–1க்கு வலது கால் பாதத்தில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ள குற்றத்திற்காக எதிரி மீது 281, 125(b) BNS–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தாலுக்கா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிக்கு எதிராக 281, 125(b) BNS–ன் படியான குற்றங்களை விசாரணைக்கு எடுத்து BNSS 210 (1) (b) ன் படி உத்தரவிடப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்க்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSS–ன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

4. போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு BNSS 263(1)–ன் படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள 281, 125(b) BNS–ன் கீழ் குற்றச்சாட்டை வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தினை ஒப்புக்கொண்டார்.

5. இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டு, தற்போது நடந்து வரும் மெகா லோக் அதாலத்தைக் கருத்தில் கொண்டும் எதிரிக்கு அபராதம் மட்டும் விதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. இறுதியாக, எதிரி 281, 125(b) BNS–ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, 281 BNS–ன் படியான குற்றத்திற்கு ரூபாய் 1000/–அபராதம் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் ஒருவாரம் மெய்க்காவல் தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும், 125(b) BNS–ன் படியான குற்றத்திற்கு ரூபாய் 10,000/–அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் ஒருவாரம் மெய்க்காவல் தண்டனையை அனுபவிக்க

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:01:14 +0530

வேண்டும் எனவும், மொத்தம் அபராதம் ரூ.11000/- விதித்தும் BNSS 264- இன்படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

7. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் அது குறித்து உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:01:19 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு